# போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் பகீர்.. அதிர்ந்த நீதிபதி; நீதிமன்றத்தை பரபரப்பாக்கிய அஜித்குமார் மரண வழக்கு! - AJITH KUMAR CASE

*போலீஸ் விசாரணையின் போது உயிரிழந்த காவலாளி அஜித்குமாரின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் பார்த்து நீதிபதி அதிர்ச்சி அடைந்து அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞரகளிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது நீதிமன்றத்தையே பரபரப்பாக்கியது.*



*அஜித்குமார் (ETV Bharat Tamil Nadu)*

By ETV Bharat Tamil Nadu Team Published : July 1, 2025 at 9:31 PM IST

**மதுரை:** சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலில் தற்காலிக காவலாளியாக பணியாற்றி வந்தவர் அஜித்குமார். கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்த பெண்ணின் நகை காணாமல் போனது தொடர்பான வழக்கில் விசாரிப்பதற்கு காவல்துறையினர் அஜித்குமாரை அழைத்து சென்றுள்ளனர். போலீஸ் விசாரணையின்போது

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான காவலாளி அஜித்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம், மாநிலம் முழுவதும் மக்களிடையே அதிர்ச்சியையும், காவல் துறையினர் மத்தியில் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அஜித்குமார் மரண வழக்கு, இன்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் விசாரணைக்கு வந்தது. விசாரணைக்கு பிறகு வழக்கறிஞர் ஹென்றி திபேன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "திருப்புவனத்தில் காவலில் எடுக்கப்பட்டு கொடூர சித்திரவதையால், சிறப்பு குழு மூலம் கொலை செய்யப்பட்ட அஜித் குமார் சார்பில் பல அமைப்புகள், இயக்கங்கள், வழக்கறிஞர்கள் இணைந்து உயர் நீதிமன்றத்தில் நீதி கேட்டு மனு தாக்கல் செய்தோம்.

தற்போது நான் அனைவர் சார்பாக பேசுகின்றேன். நீதியரசர் 27 ஆம் தேதி நடந்த சம்பவம், அந்த அம்மையாருடைய நகை காணாமல் போனது, அவர் அஜித்தை சந்தேகப்பட்டு திருப்புவனம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார், அந்த புகாருக்கு 27ம் தேதி ரசீது மட்டும் கொடுக்கப்பட்டது என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

28 ஆம் தேதி காலை 10.30 மணிக்குத் தான் நகை காணாமல் போனது சம்பந்தமாக, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் தெரிவித்தார். ஆகவே எஃப்ஐஆர் பதிவு செய்வதற்கு முன்பே மானாமதுரை டிஎஸ்பி தலைமையில் செயல்படுகின்ற ஒரு தலைமை காவலர் மட்டும் அதனை சிறப்பு குழுவிடம் எஃப்ஐஆர் இல்லாத நேரத்தில் வழக்கு விசாரணை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த சிறப்பு குழு அஜித்தையும் பின்னர் இரவில் அருணையும், மற்றவர்களையும், அவர்களது தம்பி நவீன் ஆகியோரை காவலில் இரவு முழுவதும் 27 ஆம் தேதி மற்றும் 28 ஆம் தேதி விடியற்காலை நாள் முழுவதும் திருப்புவனத்தை சுற்றி இருக்கக்கூடிய நான்கு பகுதிகளுக்கு கூட்டிச் சென்று மிகக் கொடூரமாக சித்தரவதை நடத்தினார்கள் என்பதை நீதிபதி கேட்டு ஆவேசப்பட்டு, வருத்தப்பட்டு தன்னுடைய ஆணையில் குறிப்பிட்டு இருக்கிறார்.

இறுதியாக மடப்புரம் கோயில் பின்பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு மாட்டுத் தொழுவத்தில் இறுதியாக அஜித்குமாரை அழைத்துச் சென்று நீங்கள் எடுத்து வைத்திருக்க கூடிய அந்த 10 சவரன் நகைகள் எங்கே என்று கேட்டு அங்கே இருக்கக்கூடிய பொருட்களை புரட்டி பார்த்து, அங்கே எதுவும் கிடைக்கவில்லை என்று அவருக்கு தண்ணீர் கூட கொடுக்காமல் அவரது கண்களிலும், வாயிலும் மிளகாய் பொடி போட்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு இருக்கிறோம்.

அதை நேரடியாக பார்த்து கோயில் அருகே பணியாற்றக்கூடிய சத்தீஸ்வரன் என்ற இளைஞர் கழிவறையிள் இருந்து 15 முதல் 30 வினாடிகளுக்குள் இருக்கக்கூடிய வீடியோவை பொறுப்புடன் வழக்கறிஞர்களிடம் கொடுத்து நீதிமன்றத்தில் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நீதிமன்றம் அங்கு நடந்த சம்பவத்தை பார்க்க முடிந்தது. சம்பவம் நடந்த இடத்தில் இருக்கக்கூடிய கம்புகள் உள்ளிட்டவை புகைப்படமாக சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது.

அரசு தரப்பில் காவல் நிலையத்தில் இருக்கும் கண்காணிப்பு கேமராவை கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என கூறினார்கள். ஆனால் கோயிலில் இருக்கக்கூடிய கண்காணிப்பு கேமரா காட்சிகளை அளிக்கப்பட வேண்டும் என்கின்ற காரணத்தினால் 29 ஆம் தேதி காலையில் ராமச்சந்திரன் என்ற சார்பு ஆய்வாளர் அங்கே நேரில் சென்று எந்த ஒரு விளக்கமும், எழுத்துப்பூர்வ அறிக்கையும் கொடுக்காமல் சிசிடிவி காட்சிகள் பதிவு செய்த ஹார்ட் டிஸ்க்கை எடுத்துச் செல்லப்பெற்றார் என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

அதை நாங்களும் கூறியிருக்கிறோம். அதன் பிறகு நீதியரசர் அனைத்து விஷயங்களையும் குறிப்பிட்டு பிரேத பரிசோதனை சான்றிதழை டீன் கொண்டு வரவில்லை, கொடுக்கவில்லை என்கின்ற புகாரின் காரணத்தினால் அவரை வரவழைத்து முதற்கட்ட பிரேத பரிசோதனை (sealed cover) அறிக்கையை வாங்கி அதில் 44 கொடூர காயங்கள் இருக்கின்றது என்பதை குறிப்பிட்டு, அவர் அதிர்ச்சி அடைந்தார். இவ்வளவு காயங்கள் இருக்கின்றதா? என்பதை நீதியரசர் குறிப்பிட்டார் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக அரசு தரப்பு முழுமையாக இது நடக்க கூடாத ஒரு சித்திரவதை, ஒரு வன்முறை என்று அரசு ஏற்றுக்கொள்கிறது என்று பொறுப்புடன் அரசு கூறியது என்பதை இங்கே கூற கடமைப்பட்டிருக்கின்றேன். இறுதியில் நீதிமன்றத்துடைய ஆணை என்னவென்றால் மதுரை நான்காவது கூடுதல் செசன்ஸ் ஜான் சுந்தர்லால் சுரேஷ் (என்கொயரி ஆபிஸர்) விசாரணை அலுவலராக நியமனம் செய்து அவரிடம் அனைத்து சாட்சியங்கள் மற்றும் பொருட்களை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

அவர் ஆய்வு செய்து 8 ம் தேதிக்குள் நீதிமன்றத்திற்கு தன்னுடைய அறிக்கையை முழுமையாக அவர் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆணையை குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசு தரப்பில் சிபிசிஐடி விசாரணை தொடரும் என்று கூறி அதே தேதிக்கு முன் அவர்கள் ஸ்டேட்டஸ் ரிப்போர்ட்டை கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

சாட்சிகளை யாரும் மிரட்டக்கூடாது அவர்களை மாற்றுவதற்கு முயற்சி செய்யக் கூடாது என்பதை கூறி அரசு இன்னும் மேல் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். குறிப்பிட்டு பேசும்போது ஏடிஎஸ்பி அந்த கோயில் பின் வாசலில் இருக்கக்கூடிய பகுதியில் இருந்த பொருட்களை எல்லாம் அவரே ஒரு பையில் எடுத்து சென்று விட்டார் என சொல்லப்பட்டது. ஆனால் அரசு தரப்பில் உயர் அதிகாரிகள் மீதும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

மானாமதுரை பகுதியில் இருக்கக்கூடிய டிஎஸ்பிஐ பிற்பகலில் நாங்கள் சஸ்பெண்ட் செய்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். நீதிமன்றம் அதிகமான செயல்பாடுகளை அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம் என்று வழக்கை முடித்து இருக்கிறார்கள். அவர் ஒரு என்குயரி ஆபிசர் என்று தான் கூறியிருக்கிறார் என்பதை நான் பயன்படுத்த விரும்புகிறேன். மேஜிஸ்ட்ரேட் அறிக்கையை நீதிமன்றத்தில் கொடுத்து இருக்கிறார்கள். அதனால் எங்களுக்கு அது வரவில்லை. அது, அவர்கள் சார்ந்த விஷயம்." என, வழக்கறிஞர் ஹென்றி திபேன் கூறினார்.

https://www.etvbharat.com/ta/!state/judge-shocked-to-see-ajith-kumar-postmortem-report-who-died-during-thirupuvanam-police-interrogation-tamil-nadu-news-tns25070106481